# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 69 | 4 Pages | 11.10.2023 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 69 | 4 பக்கங்கள் | 11.10.2023 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ரூ.50 ஆயிரத்துக்கு கீழ் உள்ள வணிக வரி வட்டி தள்ளுபடி: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, அக். 11

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் இன்று 110வது விதியின் கீழ் ஓர் அறிக்கை வாசித்தார். அதில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் உள்ள வணிகர் பெருமக்கள் மற்றும் நிறுவனங்களுக்கும், வணிகவரித் துறைக்கும் இடையே உள்ள வரி நிலுவை மற்றும் மேல்முறையீடுகள் குறித்த பிரச்சனைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு நல்ல வாய்ப்பாகவும், சிறு வணிகர்களின் நலன் காத்திடுவதற்கான மேலும் ஒரு முன்னோடி நடவடிக்கையாகவும், இந்த அரசு செயல்படுத்த உள்ள 'புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம்' பற்றிய அறிவிப்பை 110 விதியின்கீழ் வெளியிட விரும்புகின்றேன்.



தமிழ்நாடு அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை தொடர்பாக 2 லட்சத்து 11 ஆயிரத்து 607 கேட்பு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றில் சம்பந்தப்பட்ட வணிகர்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 569. இவற்றில் நிலுவையாக உள்ள தொகை 25 ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மிக அதிக எண்ணிக்கையில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், வணிகவரித் துறையின் பணிச்சுமை அதிகரிப்பதோடு, நமது வணிகர்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். தமிழ்நாடு அரசுக்கு வர வேண்டிய வருவாயும் பெருமளவில் நிலுவையாக உள்ளது.

இவற்றில் பெரும்பான்மையான வழக்குகள் தமிழ்நாடு வணிக வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் ஆகியவற்றின் கீழ் நிலுவையில் உள்ள வழக்குகள். மேற்கூறிய இரு முக்கிய சட்டங்கள் மற்றும் பல இதர சட்டங்களையும் உள்ளடக்கி, கடந்த 172017 முதல் நாடு முழுமைக்கும் ஜி.எஸ்.டி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

இருந்தாலும், ஏற்கனவே வழக்கத்திலிருந்த மேற்கூறிய வரிச்சட்டங்களின் கீழ் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய வரி, அதன் மீதான வட்டி மற்றும் அபராதம் ஆகியன இன்னமும் பல வணிகர்களின் பெயரில் நிலுவையில் இருந்து வருகின்றன.

இந்த நிலுவைத் தொகையை திருப்பி செலுத்துவதில் சலுகைகள் வழங்கப்பட்டு, இந்தப் பிரச்சனைகளுக்கு முடிவு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வணிகர்கள் நீண்ட நாட்களாக முன்வைத்து வருகிறார்கள். இந்தக் கோரிக்கைகளை கவனமுடன் பரிசீலித்து, இத்தகைய பழைய நிலுவைத் தொகைகளை வசூலிப்பதில் ஒரு சமாதானத் திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்திட இந்த அரசு முடிவு செய்து உள்ளது.

கடந்த ஆண்டுகளில் இந்த நிலுவைத் தொகைகள் குறித்து பல சமாதானத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு இருந்தாலும், புதியதோர் அணுகுமுறையோடும் கூடுதல் சலுகைகளோடும் இந்தத் திட்டம் இப்போது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், வரி மதிப்பீட்டு ஆண்டில் ரூ.50 ஆயிரத்திற்கு குறைவாக வரி, வட்டி, அபராதத் தொகை செலுத்த வேண்டிய வணிகர்களுக்கு இந்நிலுவைத் தொகையானது முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும். ஒவ்வொரு வரி மதிப்பீட்டு ஆண்டிலும் ரூபாய் 50 ஆயிரத்திற்கும் உட்பட்ட நிலுவை இனங்களுக்கு வரி செலுத்துவதில் இருந்து முழு விலக்கு அளிக்கப்படும்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் சிறு வணிகர்களுக்கு இவ்வாறு முழுமையாக வரி நிலுவை தள்ளுபடி செய்யப்படுவது இதுதான் முதல் முறை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அரசின் இந்த முடிவால் ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 398 வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள 95 ஆயிரத்து 502 சிறு வணிகர்கள் தமது நிலுவைத் தொகை முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டு பலனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படி நிலுவைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்ட வணிகர்கள் தவிர இதர வணிகர்கள் மற்றும் நிறுவனங்கள் அனைவரும், ரூ.50 ஆயிரம் முதல் 10 லட்சம் வரை நிலுவையில் உள்ளவர்கள், ரூ.10 லட்சம் முதல் ஒரு கோடி வரை வரி நிலுவையில் உள்ளவர்கள், ரூ. ஒரு கோடி முதல் 10 கோடி வரை நிலுவையில் உள்ளவர்கள், ரூ. 10 கோடிக்கு மேலாக நிலுவையில் உள்ளவர்கள் என நான்கு வரம்புகளின் கீழ் கொண்டு வரப்படுவர்.

மேற்கூறிய நான்கு வரம்புகளில் முதல் வரம்பில் உள்ளவர்கள் மொத்த நிலுவைத் தொகையில் 20 சதவீதத்தைக் கட்டி நிலுவை வழக்குகளில் இருந்து வெளிவரலாம்.

இதர மூன்று வரம்புகளில் உள்ளவர்கள் நிலுவையில் உள்ள வணிக வரி, வட்டி மற்றும் அபராதத் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத் தொகையைக் கட்டி நிலுவை வழக்குகளில் இருந்து வெளிவரலாம்.

இதர மூன்று வரம்புகளில் உள்ள வணிகப் பெருமக்களும், நிலுவையில் உள்ள வணிக வரி, வட்டி மற்றும் அபராதத் தொகையில் குறிப்பிட்ட சதவீதத்தைக் கட்டினால் நிலுவை வழக்குகளில் இருந்து வெளிவரும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவர்களுள், வரி விதிப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களும், வரி விதிப்பை ஏற்றுக் கொள்ளாமல் மேல்முறையீடு செய்து இருப்பவர்களுக்கும் எனத் தனித்தனியாக நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.


இந்தத் திட்டத்தின் மேலும் ஒரு முக்கியச் சலுகையாக, நிலுவைத் தொகையினை வணிகர்கள் கட்ட முன்வரும் நாள் வரை அவர்களது கணக்கில் ஏற்றப்பட ஏதுவான திரண்ட வட்டி தொகையும் முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் வணிகப் பெருமக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் செயல்படுத்தப்பட இருக்கும் இந்தத் திட்டம் வரும் 16ந்தேதி முதல் நடைமுறைக்கு வரும். 4 மாத காலம் நடைமுறையில் இருக்கும். அதாவது 2024ம் ஆண்டு பிப்ரவரி 15ந்தேதி வரை இந்த சமாதானத் திட்டம் நடைமுறையில் இருக்கும்.

அரசின் இத்தகைய முன்னோடி முயற்சியை முழுமையாக வணிகர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு தீர்வு காண்பதோடு, தமிழ்நாடு அரசுக்கு சேர வேண்டிய வருவாயையும் அளித்து, வணிகப் பெருமக்கள் மென்மேலும் தொழில் வளர்த்து வளம் பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் கூறியுள்ளார்.

## அமைதி பேச்சு வார்த்தைக்கு இந்தியா தலையிட வேண்டும்: பாலஸ்தீன தூதர் வலியுறுத்தல்



இஸ்ரேல், அக். 11

இஸ்ரேல் மீது பாலஸ்தீன பயங்கரவாத அமைப்பான ஹமாஸ், திடீர் தாக்குதலை நடத்தியது. இதில் ஏராளமான இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக ஹமாஸ் அமைப்பின் மீது இஸ்ரேல் போர் தொடுப்பதாக அறிவித்து பாலஸ்தீன எல்லை பகுதியான காசாவில் ஹமாஸ் பயங்கரவாதிகளை வேட்டையாடி வருகிறது.

தற்போதைய நிலவரப்படி இரு தரப்பிலும் 1500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஹமாஸ் அமைப்பை அழிக்கும் வரை தாக்குதலை நிறுத்த போவதில்லை என இஸ்ரேல் உறுதிபட தெரிவித்துள்ளது. இப்போரில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் இஸ்ரேலை ஆதரிக்க, மத்திய கிழக்கு நாடுகள் இப்போருக்கு இஸ்ரேலை குற்றம் சாட்டியுள்ளன.

இந்நிலையில், இந்தியாவிற்கான பாலஸ்தீன தூதர் அபு அல்ஹைஜா *(Abu Alhaija)* இத்தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

மேற்கு கரை பகுதியில் இஸ்ரேல் ஆக்கிரமித்ததன் பதில் நடவடிக்கையே ஹமாஸ் தாக்குதல். பாலஸ்தீன பகுதிகளில் உள்ள ஆக்ரமிப்பை இஸ்ரேல் நிறுத்தி கொண்டால் இஸ்ரேல் மீதான தாக்குதல்களும் நிற்கும். இந்த போருக்கு சர்வதேச நாடுகளும் ஒரு காரணம். ஐக்கிய நாடுகள் சபை பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக 800க்கும் மேற்பட்ட தீர்மானங்களை இயற்றியது. ஆனால், இஸ்ரேல் அத்தீர்மானங்களின்படி நடந்து கொள்ளவில்லை. இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்திற்கும் இந்தியா ஒரு நட்பு நாடு. எனவே இந்தியா இப்பிரச்சனையில் தலையிட்டு இரு நாடுகளுக்கிடையே தூதுவராக செயல்பட்டு ஒரு சுமூக முடிவு எட்ட முயற்சி செய்ய வேண்டும் என விரும்புகிறேன்.

இவ்வாறு அல்ஹைஜா கூறினார்.

## மியான்மர் புலம்பெயர்ந்தோர் முகாமில் குண்டு வெடிப்பு: 29 பேர் உயிரிழப்பு



மியான்மர், அக். 11

கடந்த 2021ல் மியான்மரில் நடைபெற்ற ராணுவ புரட்சியின் விளைவாக அந்நாட்டில் ஆட்சியில் இருந்து வந்த ஜனநாயகமுறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தூக்கி எறியப்பட்டு ராணுவம் ஆட்சியை பிடித்தது.

மியான்மரில் தன்னாட்சி கோரி பல வருடங்களாக போராடி வரும் அமைப்பு, கசின் சுதந்திர குழு *(Kachin Independence Organization)*. இது மியான்மர் (முன்னர் பர்மா) அரசை எதிர்த்து 1960களில் இருந்தே போராடி வருகிறது. போராடங்கள் 2011க்கு பிறகு தீவிரமடைந்துள்ளன.

இந்நிலையில், வடகிழக்கு மியான்மரில் இந்த அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள லைசா *(Laiza)* நகருக்கு வெளியே புலம்பெயர்ந்தவர்களுக்கான மோங் லாய் கெட் *(Mong Lai Khet)* முகாம் பகுதியில் வெடி குண்டு தாக்குதல்கள் நிகழ்ந்தது. இத்தாக்குதலில் 11 குழந்தைகள் உட்பட சுமார் 30 பேர் கொல்லப்பட்டனர்; 56 பேர் காயமடந்தனர். காயமடைந்தவர்களில் 44 பேருக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

உயிரிழந்தவர்கள் அனைவரும் அப்பாவி பொதுமக்கள் என கசின் சுதந்திர குழு அறிவித்துள்ளது. கசின் பகுதியை சேர்ந்த பொதுமக்கள், சுதந்திர குழுவிற்கு அளித்து வரும் ஆதரவை விரும்பாத மியான்மர் ராணுவம் இத்தகைய தாக்குதல்களில் ஈடுபடுவதாக இக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

"இத்தாக்குதல் ராணுவத்தினரால் நடத்தப்பட்ட மனித குலத்திற்கு எதிரான ஒரு போர் குற்றம்", என முன்னர் ஆட்சியில் இருந்தவர்கள் தெரிவித்தனர். இத்தாக்குதலின் பின்னணியில் ராணுவம் இருப்பதை திட்டவட்டமாக மறுத்த ஆட்சியில் இருக்கும் "ஜன்தா" ராணுவ அமைப்பின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜா மின் டுன் *(Zaw Min Tun)*, "அப்பகுதியில் ராணுவத்தினருக்கு எந்த செயல்பாடும் எப்போதும் இருந்ததில்லை. போராடும் அமைப்பினர் வெடிப்பொருட்களை தேக்கி வைத்ததால் அதில் விபத்து ஏற்பட்டு இது நிகழ்ந்திருக்கலாம்," என தெரிவித்தார்.

இந்த நிகழ்வுக்கு ஐக்கிய நாடுகளின் சபை தனது ஆழ்ந்த கவலையையும், இரங்கலையும் தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவில் சீன தூதரகத்துக்குள் காருடன் புகுந்தவர் சுட்டுக்கொலை



சான்பிரான்சிஸ்கோ, அக். 11

அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் சீன துணை தூதரகம் செயல்பட்டு வருகிறது. இந்தநிலையில் சீன தூதரகத்தின் நுழைவாயிலில் வாலிபர் ஒருவர் காரில் வேகமாக மோதினார்.

இதில் அந்த கார், சீன தூதரகத்தின் நுழைவாயிலை உடைத்து கொண்டு உள்ளே புகுந்தது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. தகவலறிந்ததும் போலீசார் அங்கு விரைந்து வந்தனர். சீன தூதரகத்துக்குள் சென்று காருடன் மோதிய நபரை பிடிக்க முயன்றனர்.

அப்போது நடந்த துப்பாக்கி சூட்டில் அந்த நபர் காயம் அடைந்தார். உடனே அவரை மீட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்தார். சீன தூதரகத்துக்குள் காருடன் புகுந்த நபர் யார்? இது தாக்குதலா? விபத்தா? என்பது குறித்து போலீசார் தெரிவிக்கவில்லை. இது குறித்து போலீஸ் செய்தி தொடர்பாளர் கேத்ரின் விண்டர்ஸ் கூறும்போது, "சீன தூதரக விசா அலுவலகத்துக்குள் காருடன் மோதிய நபரின் அடையாளம் இன்னும் தெரியவில்லை. அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்த போது, தூதரக நுழைவாயிலில் கார் ஒன்று மோதி இருந்தது. அங்கு சந்தேக நபருடன் தொடர்பு கொள்ள முயன்ற போது துப்பாக்கி சூடு நடந்தது என்றார். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் மற்றும் வெளியுறவுத்துறை புலனாய்வு குழுவினர் விசாரணை நடத்தி வருகிறார்கள். இது தொடர்பாக சீன தூதரகம் வெளியிட்ட அறிக்கையில், அடையாளம் தெரியாத நபர் ஒருவர் காரில் தூதரகத்தின் ஆவண மண்டபத்திற்குள் நுழைந்தார். இது அங்கிருந்த ஊழியர்கள், மக்களின் பாதுகாப்பிற்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியது என்று தெரிவித்தது.

## திருப்பூரில் மழைநீர் தேங்கிய பகுதிகளில் மேயர் நேரடி ஆய்வு சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு

திருப்பூர், அக். 11

திருப்பூர் மாநகராட்சி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று மாலை முதல் இரவு வரை பலத்த மழை பெய்தது. இந்த மழையின் காரணமாக திருப்பூர் குமரன் ரோடு, தாராபுரம் ரோடு, பல்லடம் ரோடு, ஊத்துக்குளி ரோடு உள்ளிட்ட பகுதிகளில் சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பலத்த மழையின் காரணமாக திருப்பூர் சத்யாநகர் உள்ளிட்ட சில பகுதிகளில் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது. இதனால் பொதுமக்கள் பலரும் பாதிக்கப்பட்டனர். இதனை அறிந்த மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் சம்பந்தப்பட்ட இடத்திற்கு விரைந்து சென்று ஆய்வு மேற்கொண்டார். மேலும், மழைநீரை விரைவாக அப்புறப்படுத்த மாநகராட்சி பணியாளர்களுக்கு உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்குவதற்கும், உணவுக்கும் ஏற்பாடு செய்து கொடுத்தார். இதேபோல் செரிப் காலனி, தோட்டத்து பாளையம், ஊத்துக்குளி ரோடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாக சென்று ஆய்வு செய்தார்.



அப்போது அங்கு தேங்கி நின்ற மழை நீரை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் வருங்காலங்களில் மழைநீர் தேங்காத வகையில் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டார்.

## அனைத்து தாலுகாக்களிலும் பொது வினியோகத்திட்ட சிறப்பு குறைதீர்க்கும் முகாம்: 14ந்தேதி நடக்கிறது

திருப்பூர், அக். 11


திருப்பூர் மாவட்டத்தில் பொது வினியோகத்திட்ட சிறப்பு குறை தீர்க்கும் முகாம் வருகிற 14ந் தேதி காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை அனைத்து தாலுகாக்களிலும் நடைபெறுகிறது.

அதன்படி அவினாசி தாலுகாவில் சேவூர் கிராமத்திலும், தாராபுரம் தாலுகாவில் சூரியநல்லூர் கிராமத்திலும், மடத்துக்குளம் தாலுகாவில் துங்காவி கிராமத்திலும், திருப்பூர் வடக்கு தாலுகாவில் கணக்கம்பாளையம் கிராமத்திலும், திருப்பூர் தெற்கு தாலுகாவில் மங்கலம் கிராமத்திலும், உடுமலை தாலுகாவில் கணபதிபாளையம் கிராமத்திலும், ஊத்துக்குளி தாலுகாவில் விருமாண்டம் பாளையம் கிராமத்திலும் அங்குள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடைபெற உள்ளது.

காங்கயம் தாலுகாவில் சேனாபதி பாளையம் கிராமத்துக்கு வேலப்பநாயக்கன்வலசு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலும், பல்லடம் தாலுகாவில் பொங்கலூர் கிராமத்துக்கு பொங்கலூர் தமிழ்நாடு வாழ்வாதார இயக்க இசேவை மையத்திலும் முகாம் நடக்கிறது.

இந்த முகாமில் அனைத்து குடிமை பொருள் தனி தாசில்தார்கள், வட்ட வழங்கல் அலுவலர்கள், தனி வருவாய் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு மனுக்களுக்கு உடனடி தீர்வு காண்பார்கள். பொதுமக்கள் ரேஷன் கார்டில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம், செல்போன் எண் பதிவு, மாற்றம் செய்தல், புதிய ரேஷன் கார்டு, நகல் அட்டை பெறுபவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இந்த தகவலை திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பராயன் திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் உள்ளூர் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சி, வளையங்காடு, காந்தி நகர் பகுதியை சேர்ந்த கோமதி மாற்றுத்திறனாளி மாணவிக்கு காது கேட்கும் கருவிகளை வழங்கினார்.



கலெக்டர் கிறிஸ்துராஜ் கலெக்டர் அலுவகல வளாகத்தில் தமிழ்நாடு குடிநீர் வாரியம் சார்பில் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்து மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரத்தை பொதுமக்களுக்கு வழங்கினார்.

# திருப்பூர் மாவட்டத்தில் டாம்கோ கழகத்தின் மூலம் கடன் வழங்கும் முகாம்: மாவட்ட கலெக்டர் தகவல்

திருப்பூர், அக். 11

திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும் சிறுபான்மையின மக்களுக்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மூலம் பல்வேறு கடன் திட்டங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளின் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

திருப்பூர் மாவட்டத்திற்கு 202324 ஆம் ஆண்டிற்கு டாம்கோ திட்டத்தின் கீழ் 1.55 (ஒரு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சம்) இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

2) திட்டம் 1ன் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் நகர்ப்புறமாயின் ரூ.1,20,000ஃக்கு மிகாமலும், கிராமப்புறமாயின் ரூ.98,000ஃ மிகாமலும் இருத்தல் வேண்டும். திட்டம் 2ன் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் ரூ.8,00,000 க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

3) திட்டம் 1ன் கீழ் தனிநபர் கடன் ஆண்டிற்கு 6%வட்டி விகிதத்திலும் அதிக பட்ச கடனாக ரூ.20,00,000மும், திட்டம் 2ன் கீழ் ஆண்களுக்கு 8%, பெண்களுக்கு 6% வட்டி விகிதத்திலும் அதிகபட்ச கடனாக ரூ.30,00,000 கடன் வழங்கப்படுகிறது. கைவினை கலைஞர்களுக்கு ஆண்களுக்கு 5% பெண்களுக்கு 4% வட்டி விகிதத்தில் அதிகபட்ச கடனாக ரூ.10,00,000ஃ கடன் வழங்கப்படுகிறது. சுயஉதவிக் குழுக்கடன் நபர் ஒருவருக்கு ரூ.1,00,000 ஆண்டிற்கு 7% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. திட்டம் 2ன் கீழ் ஆண்களுக்கு 8மூ பெண்களுக்கு 6மூ வட்டி விகிதத்திலும் நபர் ஒருவருக்கு ரூ.1,50,000 கடன் வழங்கப்படுகிறது. மேலும் சிறுபான்மை மாணவ /மாணவிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இளங்கலை/ முதுகலை தொழிற்கல்வி / தொழில் நுட்பக் கல்வி பயில்பவர்களுக்கு அதிகபட்சமாக திட்டம் 1ன் கீழ் ரூ.20,00,000 வரையில் 3% வட்டி விகிதத்திலும், திட்டம் 2ன் கீழ் மாணவர்களுக்கு 8மூ மாணவியர்களுக்கு 5மூவட்டி விகிதத்திலும் ரூ.30,00,000 வரையிலும் கல்வி கடனுதவி வழங்கப்படுகிறது.

அதன் அடிப்படையில் டாம்கோ திட்டங்களின் பயனை சிறுபான்மையின மக்கள் முழுமையாக அடையகீழ்க்காணும் இடங்களில் கடன் வழங்கும் முகாம்கள் நடைபெறுகிறது.

1.திருப்பூர் கூட்டுறவுநகர வங்கி 25.10.2023 மு.ப 10.00 முதல் பி.ப 05.00 வரை, தாராபுரம் நகர கூட்டுறவுவங்கி 26.10.2023 மு.ப 10.00 முதல் பி.ப 05.00 வரை, உடுமலைநகர கூட்டுறவுவங்கி 27.10.2023 மு.ப 10.00 முதல் பி.ப 05.00 வரை

இம்முகாமில் புதியதொழில் மேற்கொள்ளவும், ஏற்கனவே செய்து வரும் தொழிலை விரிவாக்கம் செய்யவும் கடனுதவி பெறவிண்ணப்பிக்கலாம்.

திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும் 18 வயது பூர்த்தி அடைந்த, 60 வயதுக்கு மேற்படாத சிறுபான்மையினர் (ஆறு) இக்கடன்திட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம். குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும். ஆண்டு வருமானம் சிறுபான்மையினருக்கு கிராமப்புறங்களில் வசிப்போர் ரூ.98,000 நகர்புறங்களில் வசிப்போர் ரூ.1,20,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் சாதிச்சான்று, ஆதார் கார்டு, செல்லத்தக்க வருமானச்சான்று, இருப்பிடச்சான்று, கடன் பெறும் தொழில் குறித்த விவரம்ஃதிட்டதொழில் அறிக்கை, டிரைவிங் லைசென்ஸ் (போக்குவரத்து வாகனங்கள் கடன் பெறுபவர்கள் மட்டும்) மற்றும் வங்கிகள் கோரும் இதர ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். கல்விக் கடனுக்கு விண்ணப்பிக்கும் போது பள்ளி மாற்றுச் சான்றிதழ் மற்றும் உண்மைச் சான்றிதழ்களின் நகல்களையும் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், தகவலுக்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலக தொலைபேசி எண்.0421 2999130 மற்றும் மின்னஞ்சல் dbcwotprs@gmail.com – I தொடர்பு கொள்ளுமாறும் மாவட்டகலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

# திருப்பூர் மாவட்டத்தில் பலத்த மழை வெப்பம் குறைந்து குளிர்ச்சி நிலவியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி

திருப்பூர், அக். 11



திருப்பூர் மாநகரில் வெயில் அடித்தது. மாலையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. 5 மணி அளவில் திடீரென மழை கொட்டித்தீர்த்தது. மாநகரம் முழுவதும் பலத்த காற்றுடன் மழை பெய்தது. இந்த மழை காரணமாக தாழ்வான பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. நொய்யல் ஆற்றில் மழைநீர் அதிகமாக பாய்ந்தது. சமீபத்தில் தான் நொய்யல் ஆறு, ஜம்மனை ஓடை, சங்கிலிப்பள்ளம் ஓடை ஆகியவை தூர்வாரப்பட்டது. இதன்காரணமாக மழைநீர் தடையின்றி பாய்ந்தது.

கழிவுநீர் கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டு ஆங்காங்கே மழைநீர் சாலைகளில் பாய்ந்தது. திருப்பூர் மாநகராட்சி 45வது வார்டுக்கு உட்பட்ட சத்யாநகர் பகுதியில் மழைநீர் செல்ல வழியில்லாமல் 3 வீடுகளுக்குள் புகுந்தது. அங்கிருந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு அருகில் உள்ள திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர். ஊத்துக்குளி அருகில் உள்ள காட்டுப்பகுதியில் மின்னல் தாக்கியதன் காரணமாக பனைமரம் தீப்பற்றி எரிந்தது.பலத்த மழையிலும் பச்சை மரம் தீப்பற்றி எரிவதை அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர். திருப்பூர்மாவட்டத்திற்குட்பட்ட காங்கயம், வெள்ளகோவில் உள்பட பல்வேறு இடங்களில் மழை பெய்தது. இதன் காரணமாக வெப்பத்தின் தாக்கம் குறைந்து குளிர்ச்சி நிலவியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் விவரம் வருமாறு:

திருப்பூர் வடக்கு தாலுகா அலுவலகம்55, கலெக்டர் முகாம் அலுவலகம் 68.50, திருப்பூர் தெற்கு அலுவலகம்12, கலெக்டர் அலுவலகம்113, அவினாசி தாலுகா அலுவலகம்17, ஊத்துக்குளி தாலுகா அலுவலகம்32, தாராபுரம்42, மூலனூர்36, குண்டடம்25, உப்பாறு அணை12, நல்லதங்காள் ஓடை6, அமராவதி அணை2, திருமூர்த்தி அணை12, திருமூர்த்தி அணை ஐபி11, காங்கயம்33, வெள்ளகோவில் ஆர்.ஐ., அலுவலகம் 52, வட்டமலை கரை ஓடை 31.40, பல்லடம்6. மாவட்டம் முழுவதும் மொத்தம் 565.90 மி.மீ., மழை பெய்துள்ளது. பலத்த மழை காரணமாக திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் தாழ்வான பகுதியில் குளம் போல் தண்ணீர் தேங்கியுள்ளது. திருப்பூர் மாநகரில் தேங்கியுள்ள தண்ணீரை அகற்றும் பணியில் மாநகராட்சி பணியாளர்கள் ஈடுபட்டு உள்ளனர். மேலும் சிதலமடைந்த சாலைகள் மழையால் சேறும் சகதியுமாக மாறியுள்ளன.

# சரக்கு வேன் மோதி தொழிலாளி பலி

வண்டலூர், அக். 11

சிங்கபெருமாள் கோவில் அடுத்த திருத்தேரி பகுதியை சேர்ந்தவர் சாமுண்டி(வயது55). கட்டிட தொழிலாளி. இவர் மோட்டார் சைக்கிளில் திருத்தேரி சந்திப்பில் சாலையை கடக்க முயன்றார். அப்போது செங்கல்பட்டில் இருந்து தாம்பரம் நோக்கி சென்ற சரக்கு வேன் திடீரென மோட்டார் சைக்கிள் மீது மோதியது. இதில் பலத்த காயம் அடைந்த சாமுண்டி செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார்.

இது குறித்து கூடுவாஞ்சேரி போக்குவரத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# தஞ்சையில் திராவிடர் கழகத்தினர் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர், அக். 11




10 லட்சம் மக்கள் தொகைக்கு அதிகபட்சம் 100 மருத்துவ மாணவர்கள் மட்டுமே சேர்க்கப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசின் நடவடிக்கையை கண்டித்து திராவிடர் கழகம் சார்பில் தஞ்சை ரெயிலடியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தஞ்சைமாவட்டதலைவர் அமர்சிங் தலைமை தாங்கினார்.

முன்னதாக தஞ்சை மாவட்ட செயலாளர் அருணகிரி அனைவரையும் வரவேற்றார்.

மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயக்குமார் குணசேகரன், காப்பாளர்கள் ஜெயராமன் அய்யனார், தலைமை அமைப்பாளர் குருசாமி, மாவட்ட தலைவர்கள் நிம்மதி வீரையன், மாவட்ட செயலாளர்கள் சிதம்பரம், துரைராஜ், கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கிராமப்புற பிரச்சார மாநில அமைப்பாளர் அன்பழகன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

முடிவில் தஞ்சை மாநகர தலைவர் நரேந்திரன் நன்றி கூறினார்.

# தமிழகத்தில் மாவட்டத்துக்கு ஒரு தோழி விடுதி அமைக்க நடவடிக்கை: அமைச்சர் கீதாஜீவன் தகவல்

சென்னை, அக். 11

மதுராந்தகம் தொகுதியில், பணிபுரியும் பெண்களுக்கு தங்கும் விடுதி அமைக்கப்படுமா? என்று சட்டசபையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. மரகதம் குமரவேல் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் கீதாஜீவன் பதில் அளித்து கூறியதாவது:

அடையாறு, விழுப்புரம், வேலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், திருநெல்வேலி, சேலம், திருச்சி, கூடுவாஞ்சேரி ஆகிய பகுதிகளில் தோழி விடுதி செயல்பட்டு வருகிறது.

மேலும் தாம்பரம், திருவண்ணாமலை, ஓசூர், கிருஷ்ணகிரி, செயின்ட் தாமஸ் மவுண்ட் ஆகிய இடங்களில் தோழி விடுதி கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மாவட்டத்துக்கு ஒரு தங்கும் விடுதி அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்தார்.

# நவராத்திரி விழாவை முன்னிட்டு பழனியில் 15ம் தேதி முதல் 9 நாட்களுக்கு தங்க ரத புறப்பாடு ரத்து

பழனி, அக். 11



அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழனி முருகன் கோவிலில் தைப்பூசம், பங்குனி உத்திரம் உள்ளிட்ட திருவிழாக்கள் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதே போல் திருக்கார்த்திகை, கந்தசஷ்டி, நவராத்திரி ஆகிய விழாக்களும் கோவிலில் சிறப்பாக கொண்டாடப்படும்.

அதன்படி இந்த ஆண்டுக்கான நவராத்திரி விழா பழனி முருகன் கோவிலில் வருகிற 15ந் தேதி காப்பு கட்டுதலுடன் தொடங்குகிறது. இதையொட்டி அன்றைய தினம் கோவிலில் முருகப்பெருமான், துவாரபாலகர்கள் மற்றும் கோவில் தெய்வங்களுக்கு காப்புகட்டுதல் நடைபெறும்.

மேலும் பெரியநாயகி அம்மன் கோவிலிலும் நவராத்திரி விழா அன்றே தொடங்கும். 10 நாட்கள் நடைபெறும் இந்த விழாவில் தினந்தோறும் மாலை 6 மணிக்கு பெரிய நாயகி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், இரவு 7 மணிக்கு அலங்காரம் நடைபெறும்.

மேலும் கோவில் வளாகத்தில் கொலு வைக்கப்பட்டு பக்தி சொற்பொழிவு, இன்னிசை கச்சேரி, பரதநாட்டியம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

விழாவின் 9ம் நாளான 23ந்தேதி விஜயதசமியன்று பழனி முருகன் கோவிலில் மதியம் 12 மணிக்கு உச்சிகாலபூஜை, 1.30 மணிக்கு சாயரட்சை பூஜை நடைபெறும். மதியம் 3 மணிக்கு மலைக்கோவிலில் இருந்து பராசக்தி வேல் புறப்பட்டு பெரிய நாயகி அம்மன் கோவிலுக்கு செல்லும் நிகழ்ச்சி நடைபெறும்.

அதைத் தொடர்ந்து பெரியநாயகி அம்மன் கோவிலில் இருந்து பழனி முருகன் கோவிலில் நவராத்திரி விழா மாலை 5 மணிக்கு தங்க குதிரை வாகனத்தில் கோதை மங்கலம் சென்று வில் அம்பு போடும் நிகழ்ச்சி நடைபெறும். அதன் பின் முத்துக்குமாரசாமி கோவிலுக்கு திரும்பி வரும் நிகழ்ச்சியும், அர்த்தஜாம பூஜையும் நடைபெறும். இதனையடுத்து பராசக்தி வேல் மீண்டும் பழனி முருகன் கோவிலுக்கு வந்தடையும்.

நவராத்திரி விழாவை முன்னிட்டு வருகிற 15ந் தேதி முதல் 23ந் தேதி வரை 9 நாட்களுக்கு மலைக்கோவிலில் தங்க ரத புறப்பாடு நடைபெறாது. 24ந் தேதி முதல் தொடர்ந்து வழக்கம் போல் தங்க ரதத்தில் சுவாமி புறப்பாடு நடைபெறும் என்று கோவில் நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஊட்டி கலெக்டர் அலுவலக பெயர் பலகையில் குளறுபடி




ஊட்டி, அக். 11

ஊட்டியில் உள்ள மாவட்ட கலெக்டர் அலுவலகம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டபட்டது. இன்றளவும் பழமை மாறாமல் வலிமையாகவும், கம்பீரமாகவும் மாவட்டத்துக்கு பெருமை சேர்க்கும் வகையிலும் காட்சி தருகிறது.

நூற்றாண்டுகளை கடந்தும் கட்டிடங்கள் உறுதியாக உள்ளன.

இங்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு புனரமைப்பு பணிகள் நடைபெற்றன.

அந்த பணிகளில் குளறுபடி காரணமாக தரக்குறைவு இருப்பதாக புகார்கள் எழுந்து உள்ளன.

ஊட்டி கலெக்டர் அலுவலக முகப்பில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பெயர்ப் பலகை சிதலமடைந்த நிலையில் உள்ளது. அதில் 'ஆர்' எழுத்து பதித்த சில நாட்களிலேயே கீழே விழுந்து விட்டது. எனவே ஒட்டுமொத்த புனரமைப்பு பணிகளின் தரமும் கேள்விக்குறியாக உள்ளன என தன்னார்வலர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

# விபத்தில் பெண் தொழிலாளி பலி

கோபி: அக். 11

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள நஞ்சகவுண்டன்பாளையத்தை சேர்ந்தவர் தமிழ்ச்செல்வி (45). இவர் கடந்த 2 நாட்களாக பெரிய குறவ ம்பாளையம் நடராஜபுரம் பகுதியில் உள்ள உறவினர் வீட்டில் இருந்து நடவு பணிக்கு சென்று வந்தார்.

இந்நிலையில் நேற்று இரவு தமிழ்ச்செல்வியும், நடராஜபுரத்தை சேர்ந்த பாப்பாள் (55), லட்சுமி (52), ரங்கம்மாள் (50), ஜோதி (55) ஆகியோர் ஊஞ்சக்கொரை என்ற இடத்தில் நடவு பணிக்கு சென்று விட்டு நடந்து வீடு திரும்பி கொண்டு இருந்தனர்.

காவிரிபாளையம் என்ற இடத்தில் சென்று கொண்டிருந்த போது அந்த வழியாக கடுக்காம்பாளையத்தை சேர்ந்த தமிழரசு என்பவர் அதிவேகமாக ஓட்டிச்சென்ற மோட்டார் சைக்கிள் திடீரென நிலை தடுமாறி நடந்து சென்று கொண்டிருந்த பெண் தொழிலாளர்கள் மீது மோதியது.

இதில் 5 பெண்களும், தமிழரசும் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தனர். அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகள் விபத்தை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.


பின்னர் அவர்கள் 108 ஆம்புலன்சுக்கு தகவல் கொடுத்து படுக்காயம் அடைந்த அனைவரும் சிகிச்சைக்காக கோபி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் தமிழ்ச்செல்வி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

இதைத் தொடர்ந்து படுகாயம் அடைந்தவர்களில் தமிழரசு மற்றும் ஜோதி ஆகியோர் மேல் சிகிச்சை க்காக பெருந்துறையில் உள்ள அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மற்றவர்கள் தொடர்ந்து கோபி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து குறித்து சிறுவலூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# சுந்தராபுரம் பகுதியில் அரிய வகை வெள்ளை நாகபாம்பு



கோவை, அக். 11

கோவை சுந்தராபுரம் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வசித்தவர் வழக்கம் போல தண்ணீர் தொட்டியில் தண்ணீர் நிரப்ப சென்றார்.

அப்போது அந்த தொட்டிக்குள் ஒரு பாம்பு பதுங்கி இருப்பது தெரிய வந்தது. எனவே அவர் உடனடியாக வனஉயிர் மற்றும் இயற்கை பாதுகாப்பு அறக்கட்டளையின் பாம்பு பிடி வீரர் மோகன் என்பவரை தொடர்புகொண்டார்.

அவரும் உடனடியாக சம்பவ பகுதிக்குச் சென்று தண்ணீர் தொட்டியை திறந்து பார்த்து உள்ளார். அப்போது வனப் பகுதியில் அரிதாக உலா வரும் வெள்ளைநாகம் பதுங்கி இருப்பது தெரிய வந்தது.

பார்சியல் ஆல்பினோ கோப்ரா வகையைச் சார்ந்த இந்த பாம்பு பத்திரமாக பிடிக்கப்பட்டு வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. கோவையில் சில மாதங்களுக்கு முன்பாக இதேபோல வெள்ளை நாகப்பாம்பு பிடிபட்டது.

மழைக் காலம் என்பதால் இனி பாம்புகள் பொது இடங்களில் உலாவும். பாம்பை பார்த்தால் உடனடியாக வனத்துறை மற்றும் பாம்பு பிடி வீரர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என வனவிலங்கு ஆர்வலர்கள் தெரிவித்து உள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பல மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# மர்ம காய்ச்சலுக்கு ஐ.டி.ஐ. மாணவர் பலி



அரூர், அக். 11

தருமபுரி மாவட்டம் அரூர் அருகே உள்ள சூரப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் அழகரசன் இவரது மகன் கிரி (22). இவர் அரசு ஐ.டி.ஐ முதலாம் ஆண்டு பயின்று வருகிறார்

இவர் கடந்த இரண்டு நாட்களாக காய்ச்சலுக்காக அரூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

பின்னர் சிகிச்சை முடிந்து நேற்று காலை வீடு திரும்பியுள்ளார். மீண்டும் அவருக்கு உடல் நலம் பாதிப்பு ஏற்பட்டு இன்று மாலை ஏற்கனவே சிகிச்சை பெற்று வந்த தனியார் மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்த போது இளைஞர் கிரிக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளித்ததாக கூறப்படுகிறது.

சிகிச்சை அளித்த சிறிது நேரத்தில் இளைஞர் கிரி எந்த விதமான உணர்வு இல்லாமல் இருந்ததால் அரூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்துள்ளார்கள்

பின்னர் அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தகவல் அளித்துள்ளனர். மர்ம காய்ச்சலால் ஐடிஐ மாணவன் பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

# சென்டர் மீடியனில் மோதி சாலையில் கவிழ்ந்த சரக்கு லாரி



முத்துப்பேட்டை, அக். 11

திண்டுக்கல்லில்இருந்து தில்லைவிளாகம் கிராமத்திற்கு தென்னை மட்டைகள் ஏற்றிக் கொண்டு லாரி ஒன்று முத்து ப்பேட்டை கோவிலூர் கிழக்கு கடற்கரை சாலையில் வந்து கொண்டிருந்தது. இந்நிலையில், திடீரென சாலையில் உள்ள சென்டர் மீடியனில் லாரி எதிர்பாராத விதமாக மோதியது.

இதில் லாரியின் முன்பகுதியில் உள்ள இரு சக்கரமும் துண்டாகி லாரி கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது.

இதில் லாரியை ஓட்டி வந்த டிரைவரான புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி கிராமத்தை சேர்ந்த பாலகிரு ஷ்ணன் (வயது 27) என்பவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

இதனால் அப்பகு தியில் பல மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும், அவ்வழியாக வந்த வாகன ங்கள் மாற்று பாதையில் திருப்பி அனுப்ப ப்பட்டது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த முத்துப்பேட்டை போலீசார் லாரியை சாலையிலிருந்து மீட்கும் பணியில் ஈடுபட்டு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொண்டாமுத்தூர் பேரூராட்சி பகுதியில் டெங்கு நோய் தடுப்பு பணி தீவிரம்



வடவள்ளி, அக். 11

தொண்டாமுத்தூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு பணி தீவிரமாக நடைப்பெற்று வருகிறது.

தொண்டாமுத்தூர் அனைத்து வார்டுகளிலும் டெங்கு தடுப்பு பணியாளர்கள் வீடு, வீடாகச் சென்று பணி மேற்கொண்டு வருகின்றனர்.

தேங்கி நிற்கும் தண்ணீர் தொட்டிகள், டயர்கள், போன்றவற்றில் தண்ணீர் தேங்கி நிற்கிறதா என்பதை கண்டுபிடித்து உடனடியாக அதை அப்புறப்படுத்தி மருந்து தெளித்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக 7வது வார்டு குபேரபுரி பகுதியில் ஒரு வீட்டில் தண்ணீர் தொட்டியை தொண்டாமுத்தூர் செயல் அலுவலர் பழனியப்பன் கள ஆய்வு செய்தார்.

# நடும் பணிக்காக பனை விதைகள் வழங்கிய கலெக்டர்



திருத்துறைப்பூண்டி, அக். 11

முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒரு கோடி பனை விதைகள் நடும் திட்ட த்திற்காக திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தை சார்ந்த ஆதிரெங்கம், கொருக்கை, கொக்காலடி ஆகிய ஊராட்சிகளில் ஊராட்சி தலைவர்களால் ஒரு லட்சம் பனை விதைகள் சேகரிக்கப்பட்டு திருத்து றைப் பூண்டி தாசில்தார் கலைகாரல் மார்க்ஸிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவ்வாறு சேகரிக்கப்பட்ட பனைவிதைகளில் முதற்கட்டமாக 20 ஆயிரம் விதைகளை திருத்துறைப்பூண்டி தாசில்தார், மாவட்ட கலெக்டர் சாரு ஸ்ரீயிடம் வழங்கினார்.

அதனை பெற்றுக் கொண்ட கலெக்டர் பனை விதைகளை நடும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ள ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனர் துரை ராயப்பனிடம் வழங்கினார்.

இதுகுறித்து ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனர் துரை ராயப்பன் கூறுகையில்:

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு கொக்கலாடி ஊராட்சியில் 25 ஆயிரம் பனை விதைகள் நடப்பட்டு ஒன்றரை அடி உயரம் வளர்ந்துள்ளது.

வருகின்ற மழைக்காலங்களுக்கு முன்ன தாக அனைத்து விதைகளும் நடவு செய்யப்படும் என்றார்.

தரமான பனை விதைகளை சேகரித்து இயற்கையை நேசிக்கின்ற ஊராட்சி தலைவர்களான ஆதிரெங்கம் வீரா (எ) வீரசேகரன், கொறுக்கை ஜானகிராமன், கொக்காலடி வசந்தன் ஆகியோர்களை மாவட்ட கலெக்டர் சாருஸ்ரீ வெகுவாய் பாராட்டினார்.

நிகழ்ச்சியின் போது வருவாய் ஆய்வாளர்கள் முரளிதரன், சிவக்குமார், கொருக்கை கிராம உதவியாளர் ராஜ முத்துவேல் ஆகியோர் உடன் இருந்தனர்.

# விதிமுறைகளை மீறி இயங்கும் பட்டாசு கடைகள்



கிருஷ்ணகிரி, அக். 11

கிருஷ்ணகிரியில் பழையபேட்டையில் கடந்த ஜூலை மாதம் 29ந் தேதி பட்டாசு குடோனில் பயங்கர விபத்து ஏற்பட்டது. இதில் 9 பேர் இறந்தனர். இதைத்தொடர்ந்து மாவட்டம் முழுவதும் உள்ள பட்டாசு கடைகள், குடோன்களில் அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

அப்போது கெலமங்கலம் அருகே ஒரு குடோனில் சோதனை செய்த போது பட்டாசுகள்வெடித்து சிதறியது. இதில் ஒருவர் பலியானார். அதிகாரிகள் உள்பட 3 பேர் காயமடைந்தனர். இதன் தொடர்ச்சியாக பட்டாசு கடைகள், குடோன்கள் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டன. அதில் 46 கடைகளின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டன.


இந்த நிலையில் கடந்த 7ந் தேதி தமிழக கர்நாடக மாநில எல்லையான ஓசூர் அருகே அத்திப்பள்ளியில் பட்டாசு கடையில் ஏற்பட்ட பயங்கர விபத்தில் 14 பேர் பலியானார்கள். இவர்கள் தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், கள்ளகுறிச்சி மாவட்டங்களை சேர்ந்தவர்கள் ஆவார்கள். பெங்களூரு நகருக்குள் பட்டாசு கடைகளுக்கு அனுமதி இல்லாததால் பெரும்பாலானவர்கள் பட்டாசுகள் வாங்க, கர்நாடக எல்லையான ஓசூர் அத்திப்பள்ளி பகுதிக்கு வருவார்கள்.

தற்போது அத்திப்பள்ளி–யில் பட்டாசு கடையில் பயங்கர விபத்து ஏற்பட்டு உள்ளதால் அந்த பகுதியில் இந்த முறை பட்டாசு கடைகள் அமைக்க அதிகாரிகள் கடும் விதிமுறைகளை வகுத்துள்ளனர். இந்த நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், பல இடங்களில் பட்டாசு கடைகள் உரிய விதிமுறைகளை பின்பற்றாமலும், பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமலும் இயங்கி வருவதாக பொது மக்கள் தரப்பில் புகார்கள் தெரிவித்து வருகிறார்கள்.

பட்டாசு கடைகளில் தீயணைப்பு கருவிகள், தண்ணீர், மண் நிரப்பப்பட்ட வாளிகள் வைக்க வேண்டும். கடையில் அவசர கால வழிகள் இருக்க வேண்டும் என்பது உள்பட பல விதிமுறைகள் உள்ளன. இதில் பல பின்பற்றப்படாமல் பல பட்டாசு கடைகள் உள்ளதாக பொதுமக்கள் புகார் கூறுகிறார்கள்.

எனவே இந்த முறை நகருக்குள் பட்டாசு கடைகளுக்கு அனுமதிக்க கூடாது என்றும், நகருக்கு வெளியே இடங்களை தேர்வு செய்து கொடுக்க வேண்டும் என்றும், இந்த பட்டாசு கடைகளை தொடர்ச்சியாக ஆய்வு செய்ய அலுவலர்களை நியமிக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# லெட்சுமாங்குடியில், வளரும் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டம்



மன்னார்குடி, அக். 11

கூத்தாநல்லூர் அடுத்த லெட்சுமாங்குடி பாலத்தில் இம்மானுவேல் சேகரனாரின் பிறந்த நாளில் தேவேந்திரகுல வேளாளர் சமூக மக்களின் கோரிக்கையை வலியுறுத்தி வளரும் தமிழக கட்சி சார்பில் பட்டியல் வெளியேற்ற கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

லெட்சுமாங்குடி நகர செயலாளர் முருகபாண்டியன் அனைவரையும் வரவேற்றார். திருவாரூர் மாவட்ட செயலாளர் (தெற்கு) சந்திரகுமார் முன்னிலை வகித்தார். மன்னார்குடி ஒன்றிய செயலாளர் சுந்தரமூர்த்தி தலைமை தாங்கினார். இதில் சிங்கை சரவண சோழன், ஆரோக்கிய செல்வன், ராஜா, கிட்டு ராஜசேகர், முகிலன், வினேஷ் பாவா ரமேஷ் குமார், கவிதா பழனிவேல், சதாசதீஷ் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில் குடும்ப தலைவிக்கு ரூ.1000 என அறிவித்து அனைத்து குடும்பதலைவிக்கும் கொடுக்காததை கண்டித்தும், சம்பா சாகுபடிக்கு கர்நாடகா அரசிடம் தண்ணீரை பெற்று தராத தி.மு.க அரசை கண்டித்தும் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் கோஷங்கள் எழுப்ப ப்பட்டன. முடிவில் மாவட்ட விவசாய அணி தலைவர் விக்னேஷ் நன்றி கூறினார்.

# எருமப்பட்டி அருகே கணவன், மனைவி தற்கொலை செய்தது ஏன்? உருக்கமான தகவல்கள் வெளியானது



எருமப்பட்டி, அக். 11

நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி அருகே உள்ள வரகூர் தாட்கோ காலனியை சேர்ந்தவர் பெரியசாமி (வயது 55). கூலித் தொழிலாளி. இவரது மனைவி சாந்தா (46). இவர்களுக்கு புனிதா(29) என்ற மகளும், கண்ணதாசன்(26) என்ற மகனும் உள்ளனர். புனிதாவிற்கு திருமணமாகி வெளியூரில் வசித்து வருகிறார். கண்ணதாசன் பெயிண்டராக வேலை செய்து வருகிறார்.

இந்த நிலையில் நேற்று கண்ணதாசன் வழக்கம் போல் வேலைக்கு சென்றுவிட்டார். மதியம் சாப்பிடுவதற்கு வீட்டிற்கு வந்த போது, உள்பக்கமாக தாழ்ப்பாள் போடப்பட்டு இருந்தது.

நீண்ட நேரமாக கதவை தட்டியும் கதவு திறக்காததால் சந்தேகமடைந்த கண்ணதாசன் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று பார்த்துள்ளார். அங்கு பெரியசாமி, சாந்தா ஆகியோர் வீட்டின் விட்டத்தில் ஒயரால் தூக்குப்போட்டு தற்கொலை செய்த நிலையில் பிணமாக தொங்கினர்.

இதை பார்த்து அதிர்ச்சியடைந்த கண்ணதாசன் இதுகுறித்து எருமப்பட்டி போலீசாருக்கு தகவல் அளித்தார். அதன்பேரில் சம்பவ இடத்திற்கு வந்த எருமப்பட்டி போலீசார் பெரியசாமி, சாந்தாவின் உடல்களை மீட்டு நாமக்கல் அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில் உருக்கமான தகவல்கள் வெளியாகி உள்ளது.

பெரியசாமிக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதனால் அவரால் சரிவர வேலைக்கு செல்ல முடியவில்லை. இவருடைய மனைவி சாந்தாவுக்கும் கர்ப்பப்பை கோளாறு காரணமாக சில மாதங்களுக்கு முன்பு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு உள்ளது. இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு சாந்தா தவறி விழுந்ததில் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு உள்ளது.

இதன் காரணமாக அடிக்கடி வலியால் சாந்தாவும், பெரியசாமியும் அவதிபட்டு வந்தனர்.

இதனிடையே இவர்களது மகன் கண்ணதாசன் மது பழக்கத்திற்கு அடிமையாகி, அடிக்கடி மது குடித்துவிட்டு வீட்டிற்கு வந்துள்ளார். பெற்றோரின் மருத்துவ செலவிற்கும், குடும்ப செலவுக்கும் பணம் கொடுக்காமல் இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் குடித்துவிட்டு வந்து பெற்றோரிடம் தகராறு செய்து வந்துள்ளார்.

இதனால் மனவேதனையில் இருந்த தம்பதி, மருத்துவ செலவிற்கு பணம் இல்லாததாலும், நோய் தாக்கத்தாலும் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தது விசாரணையில் தெரியவந்து உள்ளது.

# தஞ்சை மாநகராட்சியில் 13 ஊராட்சிகளை இணைத்தாலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாது



தஞ்சாவூர், அக். 11ற்

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு அருகே விளாங்குடி கிராமம் கொள்ளிடம் ஆற்றில் அமைந்துள்ள திருமானூர் நீரேற்று நிலையத்தை மாநகராட்சி மேயர் சண். ராமநாதன் மற்றும் ஆணையர் மகேஷ்வரி ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர் மேயர் சண். ராமநாதன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

திருமானூர் நீரேற்று நிலையத்தில் முதலில் உறிஞ்சும் ஆழ்குழாய் கிணறு போடப்பட்டது.

இது 18 எம். எல். டி. அளவிற்கு அமைக்க ப்பட்டு தஞ்சைக்கு தண்ணீர் வந்து கொண்டு இருந்தது.

இதை தவிர மற்றொரு ஆழ்குழாய் உறிஞ்சும் கிணறு அமைக்கப்பட்டு உள்ளன.

இதுவும் 18 எம்.எல்.டி. அளவிற்கு அமைக்கப்பட்டு தயாரான நிலையில் உள்ளது.

இந்த பணிகள் இன்னும் 2 மாதத்திற்குள் முடிந்து விடும்.

இது இரண்டும் சேர்த்தால் 36 எம். எல்.டி அளவுக்கு தஞ்சை மாநகராட்சிக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட உள்ளது.

இதுதவிர முன்பு இருக்கக்கூடிய 23 எம். எல். டி.யும் சேர்த்தால் சுமார் 60 எம்.எல்.டி. அளவிற்கு தண்ணீர் தஞ்சை மாநகருக்கு விநியோகம் செய்ய இருக்கிறது.

நம்முடைய மக்கள் தொகை கணக்கெடுப்பு சுமார் 30 எம்.எல்.டி. 'அளவிற்கு தஞ்சைக்கு தண்ணீர் வந்தாலே போதுமானது.

தற்போது அளவிற்கு 2 மடங்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

இந்நிலையில் தஞ்சை மாநகராட்சியில் இன்னும் 13 ஊராட்சிகளை இணைத்தாலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாது.

இந்த பணிகள் மாநகராட்சிக்கு பெருமை சேர்க்கும் அளவிற்கு தமிழ்நாடு முதல் அமைச்சர் மற்றும் இத்துறை அமைச்சரின் ஒப்புதலோடு செய்து வருகிறோம்.

இதன் திட்ட மதிப்பீடு ரூ.73 கோடி ஆகும். குறைந்தபட்சம் 30 ஆண்டுகளுக்கு மிகாமல் குடிநீர் தட்டுப்பாடு என்பது இருக்காது.

இன்னும் 10 மேல்நிலை நீர் தேக்க தொட்டியும் கட்டிக் கொண்டிருக்கிறோம்.

இதன் திறப்பு விழா விரைவில் நடைபெற்றவுடன் 24 மணி நேரமும் எவ்வித தடையும் இன்றி பொதுமக்களுக்கு தண்ணீர் கிடைக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின் போது மாநகராட்சி செயற்பொறியாளர் பொறுப்பு ராஜசேகரன், உதவி பொறியாளர் கார்த்திகேயன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# மின்சாரம் தாக்கி எலக்ட்ரீசியன் பலி



பு.புளியம்பட்டி, அக். 11

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி அடுத்த காரப்பாடி கிராமத்தை சேர்ந்தவர் கவியரசு (வயது 45). இவர் எலக்ட்ரீசியனாக வேலை செய்து வந்தார். இவருக்கு சித்ரா என்ற மனைவும் மற்றும் 2 பெண் குழந்தைகள் உள்ள னர்.

இந்த நிலையில் கவியரசு கொமார கவுண்டன் பாளையம் பகுதியில் உள்ள ஒரு தோட்டத்தில் பழுது அடைந்த மின் மோட்டாரை சரி செய்து கொண்டிருந்தார்.

அப்போது கவியரசன் மீது திடீரென எதிர்பாராத விதமாக மின்சாரம் பாய்ந்தது. இதில் அவர் கீழே விழுந்தார். இதை கண்ட உடன் இருந்த பிரகாஷ் மற்றும் அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு ஆம்புலன்சு மூலம் சத்தியமங்கலம் அரசு மரு த்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் கவியரசு வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதையடுத்து கவியரசு உடல் பிரேதபரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

இது குறித்து புளியம்பட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் அன்பரசு மற்றும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



## ஐ.நா. தலைமையகத்தில் ஏ.ஆர்.ரகுமான் ட்ரெண்டாகும் புகைப்படம்

இந்திய சினிமாவின் முன்னணி இசையமைப்பாளரான ஏ.ஆர்.ரஹ்மான் தமிழ், தெலுங்கு, இந்தி மற்றும் ஹாலிவுட் படங்களுக்கு இசையத்து வருகிறார். அதுமட்டுமல்லாமல் பல இசை நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறார். சமீபத்தில் சென்னையில் இவர் நடத்திய இசை நிகழ்ச்சியில் கூட்டநெரிசல் மற்றும் போக்குவரத்து நெரிசலால் பல்வேறு சர்ச்சைகள் எழுந்தன.

இதைத்தொடர்ந்து பல ரசிகர்கள் ஏ.ஆர்.ரகுமானுக்கு எதிராக கருத்து பதிவிட்டு வந்த நிலையில் திரைப்பிரபலங்கள் பலர் அவருக்கு ஆதரவு தெரிவித்து பதிவுகளை பகிர்ந்திருந்தனர். அதுமட்டுமல்லாமல் ஏ.ஆர்.ரகுமான் இசை நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாத ரசிகர்களுகு கட்டணம் திருப்பி கொடுக்கப்படும் என்று அறிவித்திருந்தார். அந்த கட்டணங்களும் திருப்பி கொடுக்கப்பட்டன.

இந்நிலையில், ஸ்விட்சர்லாந், ஜெனிவாவில் உள்ள ஐ.நா. சபையின் தலைமையகத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் சென்றுள்ளார். இது தொடர்பான புகைப்படத்தை அவர் தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். அவர் எதற்காக ஐ.நா. சென்றார் என்ற தகவல் வெளியாகவில்லை.

கடந்த 2016ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி சுதந்திர தினத்தை முன்னிட்டு ஐ.நா.வில் ஏ.ஆர்.ரகுமான் இசை நிகழ்ச்சி நடத்தினார். பிரபல கர்நாடக பாடகி எம்.எஸ். சுப்புலட்சுமிக்கு பிறகு ஐ.நா.வில் இசை நிகழ்ச்சி நடத்திய இரண்டாவது இந்தியர் ஏ.ஆர்.ரகுமான் என்பது குறிப்பிடத்தக்கது.





## அவளோடு இருக்கும் ஒருவித சிநேகிதன் ஆனேன் கவனம் ஈர்க்கும் விக்கி பதிவு



நயன்தாரா விக்னேஷ் சிவன் தம்பதி, தங்களது மகன்கள் உயிர் மற்றும் உலக் ஆகியோரின் முதலாவது பிறந்தநாளை கொண்டாடினார்.

இந்த பிறந்தநாளை கொண்டாடிய கையுடன் நயன்தாரா விக்னேஷ் சிவன் தம்பதி மலேசியாவுக்கு சென்றனர்.

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகையான நயன்தாரா, தென்னிந்திய நடிகைகளில் அதிகம் சம்பாதிக்கும் நடிகையாக வலம் வருகிறார். கதை, கதாபாத்திரங்களை பொறுத்து ஒவ்வொரு படத்திற்கும் கோடி கணக்கில் சம்பளம் வாங்கி வருகிறார். நயன்தாரா நடிப்பு மட்டுமல்லாமல் வேறு சில தொழில்களிலும் முதலீடு செய்துள்ளார்.

சமீபத்தில் நயன்தாரா விக்னேஷ் சிவன் தம்பதி, தங்களது மகன்கள் உயிர் மற்றும் உலக் ஆகியோரின் முதலாவது பிறந்தநாளை கொண்டாடினார். அவர்களது முகங்களையும் வெளியுலகுக்கு காண்பித்தனர். இந்த பிறந்தநாளை கொண்டாடிய கையுடன் நயன்தாரா விக்னேஷ் சிவன் தம்பதி மலேசியாவுக்கு சென்றனர்.

இந்த நிலையில் நயன்தாராவுடன் விக்னேஷ்சிவன் மலேசியாவில் இரவு நேரத்தில் உலா வரும் புகைப்படங்களை சமூக வலைதளத்தில் பகிர்ந்து 'அவளோடு இருக்கும் ஒரு வித சிநேகிதன் ஆனேன்' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த புகைப்படத்திற்கு ரசிகர்கள் லைக்குகளை குவித்து கமெண்ட் செய்து வருகின்றனர்.

## லியோ படத்தின் மூன்றாவது பாடல்.. வெளியானது சூப்பர் அப்டேட்






லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரித்துள்ளார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். லியோ திரைப்படம் அக்டோபர் 19ம் தேதி வெளியாக இருக்கும் நிலையில், இந்த படத்தில் இடம்பெற்றுள்ள இரண்டு பாடல்கள் மற்றும் படத்தின் டிரைலர் ஏற்கனவே வெளியாகி பெரும் வரவேற்பை பெற்று வருகிறது.

இந்த நிலையில், லியோ படத்தின் மூன்றாவது பாடல் "அன்பெனும்" இன்று (அக்டோபர் 11) வெளியாகும் என்று படக்குழு அறிவித்து இருக்கிறது.

## கிங்ஸ்டனாக மாறிய ஜிவி பிரகாஷ்



ஜி.வி. பிரகாஷ் குமார் நடிப்பில் உருவாகும் அவரின் 25வது படத்தின் டைட்டில் லுக் போஸ்டரை நடிகர் கமல்ஹாசன் வெளியிட்டார். அதன்படி இந்த படத்திற்கு கிங்ஸ்டன் என்று தலைப்பிடப்பட்டு இருக்கிறது. ஜி.வி. பிரகாஷ்இன் பேரலல் யுனிவர்ஸ் பிக்சர்ஸ் மற்றும் ஜீ ஸ்டுடியோஸ் இணைந்து தயாரிக்கும் கிங்ஸ்டன் படத்தை இயக்குனர் கமல் பிரகாஷ் எழுதி, இயக்குகிறார்.

இது ஜி.வி. பிரகாஷ் குமார் தயாரிக்கும் முதல் படம் ஆகும். இந்தப் படத்தில் நடிகை திவ்யபாரதி, ஜி.வி.பிரகாஷுக்கு ஜோடியாக நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது. கடந்த 2011ஆம் ஆண்டு ஜி.வி.பிரகாஷ் திவ்ய பாரதி நடிப்பில் வெளியான 'பேச்சுலர்' திரைப்படம் பெரிய அளவில் பேசப்பட்டது. தற்போது இந்த ஜோடி மீண்டும் இணையவுள்ளது எதிர்பார்ப்புகளை அதிகரித்துள்ளது.

## மீண்டும் வெளியாகும் மார்க் ஆண்டனி



இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் விஷால் நடித்துள்ள திரைப்படம் 'மார்க் ஆண்டனி'. இப்படத்தின் நாயகியாக ரித்து வர்மா நடித்துள்ளார். மேலும் எஸ்.ஜே.சூர்யா மற்றும் செல்வராகவன் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ள இந்த படம் செப்டம்பர் 15ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகி விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இப்படம் 25 நாட்களை கடந்து திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது. மேலும், ரூ.100 கோடி வசூலை எட்டியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், 'மார்க் ஆண்டனி' திரைப்படத்தின் ஓடிடி ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் வருகிற 13ஆம் தேதி அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ளது. இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு ரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளது.

## பூணூல் அணியும் சமூகத்தில் பிறக்க வேண்டும்: சுரேஷ் கோபி



மலையாளத்தில் பல படங்கள் நடித்து முன்னணி நடிகராக இருப்பவர் சுரேஷ் கோபி. தமிழில் தீனா, ஐ உள்ளிட்ட சில படங்களில் நடித்துள்ளார். இவர் நடிப்பது மட்டுமல்லாமல் அரசியலிலும் ஈடுபட்டுவருகிறார். பா.ஜ.க. கட்சியை சேர்ந்த சுரேஷ் கோபி, கொச்சியில் ஒரு விழாவில் பங்கேற்றார்.

அப்போது அவர், மறு பிறவியில் நம்பிக்கை கொண்டவன் நான். எனது மறு பிறவியில் தந்திரி குடும்பத்தில் பிறக்க விரும்புகிறேன். பூணூல் அணியும் சமூகத்தில் பிறந்து சபரிமலை தந்திரியாக வேண்டும். சபரிமலையில் வெளியில் இருந்து அய்யப்பனை தரிசனம் செய்தால் மட்டும் போதாது. கோவிலுக்குள் சென்று அமர்ந்து பூஜை செய்து தரிசிக்க வேண்டும். அய்யப்பனை கட்டிப்பிடித்து முத்தமிட விரும்புகிறேன் என்றார்.

சுரேஷ் கோபி இதற்கு முன்பு ஒரு முறை இதுபோல பேசி சர்ச்சையில் சிக்கி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரசிகர்கள் மத்தியில் தனி கவனம் பெற்ற 'கண்பத்' டிரைலர்



விகாஸ் பாஹி இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'கண்பத்'. டைகர் ஷெராப், கீர்த்தி சனோன், அமிதாப் பச்சன் ஆகியோர் நடித்துள்ள இந்த திரைப்படத்தை பூஜா எண்டர்டெயின்மென்ட் மற்றும் குட் கோ நிறுவனம் சார்பில் வாசு பாக்னானி, ஜாக்கி பாக்னானி, தீப்ஷிகா தேஷ்முக் மற்றும் விகாஸ் பால் ஆகியோர் பிரமாண்டமாக தயாரித்துள்ளனர்.

இப்படம் இந்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் ஆகஸ்ட் 20ஆம் தேதி வெளியாகவுள்ளது. மிகவும் எதிர்பார்க்கப்படும் படங்களில் ஒன்றான 'கண்பத்' திரைப்படத்தின் டிரைலர் வெளியாகியுள்ளது. இது நாடு முழுவதும் உள்ள ரசிகர்களையும் பார்வையாளர்களையும் முழுமையாக பிரமிப்பில் ஆழ்த்தியுள்ளது. இப்படத்தில் உள்ள VFX அனைவரையும் கவர்ந்து இருக்கிறது.

## உடல் ரீதியாக டைகர் 3 எனக்கு மிகவும் சவாலான படம்: கத்ரீனா



கபீர் கான் இயக்கத்தில் சல்மான் கான், கத்ரீனா கைஃப் நடிப்பில் கடந்த 2012ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் 'ஏக் தா டைகர்'. இப்படம் பெரும் வெற்றி பெற்றது. இதைத்தொடர்ந்து 2017ஆம் ஆண்டு அலி அப்பாஸ் ஜாஃபர் இயக்கத்தில் 'டைகர் ஜிந்தா ஹே' திரைப்படம் வெளியாகி வரவேற்பை பெற்றது.

இதன் மூன்றாம் பாகமாக தற்போது 'டைகர் 3' உருவாகியுள்ளது. மணீஷ் சர்மா இயக்கியுள்ள இப்படத்தில் சல்மான் கான், கத்ரீனா கைஃப் நடித்துள்ளனர். யஷ்ராஜ் பிலிம்சின் ஸ்பை திரில்லராக உருவாகியுள்ள இப்படம் தீபாவளியன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், 'டைகர் 3' திரைப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, கத்ரீனாவின் சோலோ போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.

இது குறித்து கத்ரீனா கூறியதாவது, ஜோயா, ஒய்.ஆர்.எப். ஸ்பை யுனிவர்ஸின் முதல் பெண் உளவாளி, அது போன்ற ஒரு கதாபாத்திரம் கிடைத்ததில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். அவள் கொடூரமானவள், அவள் தைரியமானவள், அவள் நல் இதயம் கொண்டவள் , அவள் விசுவாசமானவள், அவள் பாதுகாவலர், எல்லாவற்றிற்கும் மேலாக அவள் மனிதகுலத்திற்காக ஒவ்வொரு முறையும் முன் வருகிறார்.

ஒய்.ஆர்.எப். ஸ்பை யுனிவர்ஸில் ஜோயாவாக நடித்தது ஒரு நம்பமுடியாத பயணம் மற்றும் ஒவ்வொரு படத்திலும் நான் என்னை சோதனைக்கு உட்படுத்தினேன், இதற்கு டைகர் 3 விதிவிலக்கல்ல. இந்த முறை ஆக்ஷன் காட்சிகளை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல விரும்பினோம், படத்திற்காக எனது உடலை பிரேக்கிங் பாயிண்டிற்கு தள்ளியுள்ளேன், மக்கள் அதை பார்ப்பார்கள். உடல் ரீதியாக இது எனக்கு மிகவும் சவாலான படம்.

எப்போதும் ஆக்ஷன் செய்வது உற்சாகமாக இருக்கும், நான் எப்போதும் போல் ஆக்ஷன் வகையின் ரசிகை . அதனால், ஜோயாவாக நடிப்பது எனக்கு ஒரு கனவு. வலிமையான, தைரியமான வேடம் ஏற்றேன் சோயாவை திரையில் பார்க்கும்போது மக்கள் என்ன எதிர்வினையாற்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன் என்று கூறினார்.

## மக்களுக்கு உதவியதற்காகவே ஜிகர்தண்டா2 வெற்றிப்படமாக அமையும் ராகவா லாரன்ஸ்



'ஜிகர்தண்டா' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து 8 வருடங்களுக்கு பிறகு இப்படத்தின் இரண்டாம் பாகம் உருவாகியுள்ளது. கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ள இந்த படத்தில் எஸ்.ஜே.சூர்யா மற்றும் ராகவா லாரன்ஸ் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படம் வருகிற தீபாவளியன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இப்படத்தின் முதல் பாடலான 'மாமதுர' பாடல் நேற்று வெளியானது. இந்த பாடலை இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் தனது சமூக வலைதளத்தில் வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில் எஸ் ஜே சூர்யா, ராகவா லாரன்ஸ், தயாரிப்பாளர் கார்த்திகேயன் சந்தானம், இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் நடிகர் ராகவா லாரன்ஸ் பேசியதாவது, 'ஜிகர்தண்டா 1' நான் பண்ணவேண்டியது. கதிரேசன் மற்றும் கார்த்திக் சுப்பராஜ் கதை சொன்னார்கள். தெலுங்கு படத்தில் நான் பணியாற்றிக் கொண்டு இருந்ததால் அந்தப்படத்தை என்னால் செய்ய முடியவில்லை. நான் ரொம்ப மிஸ் பண்ணிவிட்டேன் என்று கவலைப்பட்டேன். அதற்கு கடவுள் கொடுத்த வாய்ப்பு தான் 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்'.

எனக்கு வாழ்க்கையில யாரெல்லாம் கற்றுக் கொடுக்கிறார்களோ அவர்களை நான் குரு என்று தான் சொல்லுவேன். பாலசந்தர் சார் கூட ஒரு படத்தில் பணியாற்றி இருக்கிறேன். ரஜினி சாரை நான் குரு என்று தான் சொல்லுவேன். கார்த்திக் சுப்பராஜும் இப்போது குரு தான். அவர் என்ன சொன்னாரோ அது தான் இந்தப்படம்.

கார்த்திக் சுப்பராஜ் இந்தப்படத்தை மிகவும் சிறப்பாக உருவாக்கி உள்ளார். படப்பிடிப்பு நடைபெற்ற இடம் ஒன்றில் மக்களுக்காக சாலை அமைத்து தந்துள்ளார்கள். அடுத்தவர்களுக்கு உதவிய காரணத்திற்காகவே இந்தப்படம் வெற்றிப்படமாக அமையும். சந்தோஷ் நாராயணன் சாரோட பெரிய ரசிகன் நான். நிறைய மேடைகள் இருக்கிறது. இந்தப்படத்தை பற்றி நிறைய பேச வேண்டும். எஸ் ஜே சூர்யா சாருடன் நடித்தது மகிழ்ச்சி.

## டேவிட் மலான், டாப்ளே அபாரம் 137 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி




13வது உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் நடைபெறும் ஆட்டத்தில் பலம் வாய்ந்த நியூசிலாந்து அணியுடன் நெதர்லாந்து மோதியது. இதில் டாஸ் வென்ற நெதர்லாந்து முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து அணி ரச்சின் ரவீந்திரா, வில் யங், டாம் லாதம் ஆகியோரின் அரை சதத்தால் 50 ஓவரில் 7 விக்கெட்டுகளை இழந்து 322 ரன்கள் குவித்தது. நெதர்லாந்து தரப்பில் ஆர்யன் தத், பால்வான்மீகெரென், ரோலோஃப்வான்டெர்மெர்வே ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதனையடுத்து 323 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நெதர்லாந்து அணி களமிறங்கியது. தொடக்கத்தில் சிறப்பாக ஆடிய நெதர்லாந்து அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது. நெதர்லாந்து அணி அதிகபட்சமாக கொலின் அக்கர்மேன் 69 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மற்ற வீரர்கள் சொற்ப ரன்னில் வெளியேற இறுதியில் நெதர்லாந்து அணி 46.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 223 ரன்கள் எடுத்தது.

நியூசிலாந்து தரப்பில் மிட்செல் சாண்ட்னர் 5 விக்கெட்டும் மாட் ஹென்றி 3 விக்கெட்டும் கைப்பற்றினர்.

## குசால் மெண்டிஸ், சதீரா அதிரடி சதம் பாகிஸ்தான் வெற்றிபெற 345 ரன்களை நிர்ணயித்தது இலங்கை




உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இமாசலப்பிரதேசத்தின் தர்மசலாவில் 7வது லீக் போட்டி இன்று நடைபெறுகிறது. இதில் இங்கிலாந்து, வங்காளதேசம் ஆகிய அணிகள் மோதுகின்றன. டாஸ் வென்ற வங்காளதேசம் பவுலிங் தேர்வு செய்தது.

அதன்படி, இங்கிலாந்து அணி முதலில் களமிறங்கியது. பேர்ஸ்டோவ், டேவிட் மலான் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கினர். முதல் விக்கெட்டுக்கு 115 ரன்கள் சேர்த்த நிலையில் பேர்ஸ்டோவ் அரை சதமடித்து 52 ரன்னில் அவுட்டானார்.

அடுத்து இறங்கிய ஜோ ரூட், மலானுடன் இணைந்து அதிரடியை தொடர்ந்தார். இருவரும் கிடைத்த பந்துகளை சிக்சர், பவுண்டரிகளாக விளாசினர். டேவிட் மலான் பொறுப்புடன் ஆடி சதமடித்தார். ஜோ ரூட் அரை சதமடித்தார்.

2வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த மலான், ஜோ ரூட் 151 ரன்கள் சேர்த்தனர். மலான் 107 பந்தில் 5 சிக்சர், 16 பவுண்டரி உள்பட 140 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். ஜோ ரூட் 68 பந்தில் ஒரு சிக்சர், 8 பவுண்டரி உள்பட 82 ரன்கள் சேர்த்தார் இறுதியில், இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 364 ரன்கள் குவித்தது. வங்காளதேசம் சார்பில் மெஹிதி ஹசன் 4 விக்கெட்டும், ஷோரிபுல் இஸ்லாம் 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 365 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்காளதேசம் களமிறங்குகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.